Anglicare Victoria

# தகவல் சிற்றேடு



BETTER TOMORROWS

1800 809 722 | anglicarevic.org.au

# Anglicare Victoria மற்றும் அதன் சேவைகள் பற்றியும், உங்களது உரிமைகள் மற்றும் பொறுப்புகள் பற்றியும் இந்தச் சிற்றேடு தகவல் அளிக்கின்றது

உங்கள் முதன்மை தொடர்பாளரின் பெயர்: ______________________

அவரின் தொடர்பு விவரம்: ______________________

நீங்கள் இணைந்திருக்கும் சேவை: ______________________

அலுவலக முகவரி: ______________________

தொலைபேசி எண்: ______________________

பதிப்பு 4, அக்டோபர் 2018

**முக்கியமான தகவல்**

இந்தச் சிற்றேட்டின்ரசீதையும் உள்ளடக்கத்தின் புரிதலையும் ஒப்புதல் செய்ய 19-ம் பக்கம் திருப்புக.

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| Anglicare Victoria-அறிமுகம் | **4** |
| கலாச்சாரத்தை ஆதரித்தல் | **6** |
| பன்முகத்தன்மை மற்றும் ஒன்றிணைப்பு | **7** |
| இணைந்து பணிபுரிதல் | **8** |
| உரிமைகளும் பொறுப்புகளும் | **9** |
| உங்கள் பாதுகாப்பு | **10** |
| உங்கள் இலக்குகளை அடைதல் | **12** |
| உங்கள் விவரங்கள் | **12** |
| தனியுரிமை மற்றும் இரகசியக்காப்பு | **14** |
| தகவல் பரிமாற்றம் | **15** |
| பாதுகாப்புக் கடமை | **16** |
| தகவலை அறிக்கையிடுதல் | **16** |
| பின்னூட்டம் மற்றும் குற்றச்சாட்டுகள் | **17** |
| முடிவுரை | **19** |
| எங்களைத் தொடர்பு கொள்ள | **20** |
| பயனுள்ள தொடர்புகள் | **22** |

## எங்கள் கொள்கைகள்

- எங்கள் வாடிக்கையாளர்களின் வாழ்வில் ஒரு நல்ல மாற்றத்தைக் கொண்டுவர முயல்கின்றோம்
- அனைவரும் முக்கியம் என்றும் அனைவரும் மதிக்கப்பட வேண்டும் என்றும் நம்புகிறோம்
- பிறரிடம் பரிவாய் இருக்கவேண்டும் என்ற கிறிஸ்தவ நற்செய்தியை நம்புகிறோம்
- கூட்டுறவு மனநிலையில் ஒன்றாய் பணிபுரிகிறோம்
- சமூக நலனுக்காகத் தலைமை சார்ந்த பிரச்சனைகளுக்குத் தீர்வு அளிக்கின்றோம்

# Anglicare Victoria-அறிமுகம்

**Anglicare Victoria-வில் குழந்தைகள், இளைஞர்கள், பெரியவர்கள் மற்றும் குடும்பங்களுக்கு துணைபுரிந்து அவர்களின் வாழ்வில் நல்ல மாற்றங்களை கொண்டு வர முயல்கிறோம்.**

**எங்களின் சேவைகள் பின்வருமாறு:**

**வீடு சார்ந்த மற்றும் குடியிருப்பு கவனிப்பு, குடும்பம் மற்றும் குழந்தை வளர்ப்பு உதவிகள், அவசரகால உதவி, இளையோருக்கான திட்டங்கள், மது மற்றும் போதைப் பொருட்கள் ஒழிப்புத் திட்டங்கள், கல்விக்கான உதவி, சிறப்பு ஆலோசனை, திருச்சபை கூட்டுறவு மற்றும் சமூக மேம்பாடு.**

**உங்களுடன் செயல்பட்டு:**

- உங்களுக்கு எது முக்கியம் என்று விவாதிப்போம்
- உங்கள் சமூக மற்றும் சமுதாய வாழ்வை விரிவடையச் செய்வோம்
- உங்களின் நடைமுறை வாழ்க்கைக்கான திறன்களுக்கு வலு சேர்ப்போம்
- கல்விக்கான அணுகலை அதிகரிப்போம்
- உங்கள் குழந்தை வளர்ப்புத் திறனை மேம்படுத்துவோம்

**மேலும் நாங்கள்:**

- இளையோர் மற்றும் குழந்தைகளின் தேவைகள் குறித்து தனிப்பட்ட கவனம் செலுத்துகிறோம்
- குடும்பங்கள் மற்றும் பாதுகாவலர்களுக்கு துணை நிற்கிறோம்
- உங்களுக்குப் பொருத்தமான மற்றும் மாற்றிக்கொள்ளக்கூடிய அணுகுமுறைகளில் சேவைகளை அளிக்கிறோம்

## குழந்தைகள், இளையோர் மற்றும் குடும்பங்களுக்குத் துணை நிற்கின்றோம்





# கலாச்சாரத்தை ஆதரித்தல்

**கலாச்சாரத் தொடர்புகள்**

உங்கள் கலாச்சார மற்றும் மொழி வித்தியாசங்கள் எங்கள் சேவைகளைப் பெறுவதில் விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை Anglicare Victoria-வில் நாங்கள் அறிந்திருக்கிறோம்.

உங்கள் பழக்கவழக்கங்களை மதித்து, உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப உங்களுடன் பணிபுரிவோம். நீங்கள் எதை அடைய விரும்புகிறீர்கள் என்பதைக் கண்டறிந்து திட்டமிட நாங்கள் உங்களுக்கு உதவுவோம், மேலும் நீங்கள் பொருத்தமான ஆதரவைப் பெறுவதை உறுதிசெய்கிறோம்.

**ஆஸ்திரேலியாவின் பூர்வ குடி மக்கள்**

எங்களின் சேவைகள் கலாச்சார ரீதியாகப் பாதுகாப்பானவை மற்றும் பழங்குடியினர் மற்றும் டாரஸ் ஸ்ட்ரைட் தீவு மக்களை வரவேற்பதாகவும் உள்ளன. மேலும், எங்களின் பணி எங்கள் பூர்வ குடிமக்களின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை முற்றிலும் மதிப்பதாகவும் அமைந்தவை.





ஆங்கிலம் உங்களது தாய்மொழி இல்லை மற்றும் உங்களுக்கு மொழிபெயர்ப்பவர் தேவை என்றால் நாங்களே ஏற்பாடு செய்வோம். இவ்வாறான உதவிகள் தேவைப்படுமாயின் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.

# பன்முகத்தன்மை மற்றும் ஒன்றிணைப்பு

**எங்களின் அனைத்து வாடிக்கையாளர்கள், தன்னார்வலர்கள் மற்றும் பணியாளர்களின் நலன்கருதி எங்கள் Anglicare Victoria நிறுவனம் முழுவதும் பன்முகத்தன்மையும் உள்ளடக்கலையும் உறுதி செய்வதில் உறுதியாக உள்ளது.**

எங்கள் மக்களை எங்களின் மிகப்பெரும் சொத்தாக நம்பி, அவர்களுக்குத் துணை நின்று, அவர்களின் வேறுபட்ட திறமைகளையும், அறிவையும், கண்ணோட்டங்கள் மற்றும் அனுபவங்களையும் ஒன்றிணைத்து, சமூகத்துடனான எங்கள் உறவுகளை உறுதிப்படுத்துகிறோம்.

நியாயமான சமுதாயத்தை உருவாக்குவதே எங்கள் நோக்கம், அதாவது நாங்கள் அளிக்கும் சேவைகள் மற்றும் பணியிடத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதே ஆகும். ஒரு பன்முகத்தன்மை உள்ள மற்றும் பலவிதமான மக்களை உள்ளடக்கிய நிறுவனம் என்பதை எங்கள் செயல்களிலும் காட்டுகிறோம் அதனால், பாதிப்புக்குரிய குழந்தைகள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்குவதற்கான எங்களின் திட்டமிட்ட நோக்கத்திற்குத் துணை நிற்கிறோம்.

**பன்முகத்தன்மையைக் கொண்டாடுவது ஒருவரை ஒருவர் மேலும் புரிந்துகொள்ளவும், அதிகமான மதிப்பை விதைக்கவும், ஆழமான தொடர்புக்கும் வழிவகுத்து, எங்கள் சேவைகளையும் பணியிடத்தையும் வலுப்படுத்தி, பலதரப்பட்ட மக்களையும் ஏற்பதை உறுதிப்படுத்துகிறோம்.**





## இணைந்து பணிபுரிதல்

எங்கள் பணியாளர் ஒருவர் உங்கள் ‘முதன்மைத் தொடர்பாளர்’ இருப்பார், அவரிடமே நீங்கள் அதிகம் தொடர்புகொள்வீர்கள். உங்களுடன் பணிபுரிந்து நல்லுறவை மேம்படுத்துவது எங்களுக்கு முக்கியமானதாகும்.

**நமது கூட்டுப் பணியின் முக்கிய நோக்கங்கள்:**

- திறன் மற்றும் நம்பிக்கை வளர்ப்பு
- தனியுரிமை, இரகசியக்காப்பு மற்றும் கண்ணியத்தை நிலைநாட்டுதல்
- தீர்ப்பிடாமல் கருத்துக்களைக் கேட்பது
- ஒரு திட்டத்தை உருவாக்கி, அதை உங்களிடம் தொடர்ந்து மதிப்பாய்வு செய்வது
- அனைவருக்கும் புரியும்படி தெளிவாக விளக்குவது
- விருப்பங்கள் மற்றும் வழிகாட்டுதல்களை நேரம் ஒதுக்கி கவனத்தில் கொள்வது
- உங்கள் குடும்ப, நட்பு மற்றும் சமூகத் தொடர்புகளுக்குத் துணை நிற்பது
- மரியாதைக்குரிய அணுகுமுறையை மேற்கொள்வது

**உதவியாளரின் பங்கு**

Anglicare Victoria-வுடன் முதன்மைத் தொடர்பாளருடன் இணைந்து திட்டமிட்டு முடிவுகளை எடுக்கும் போது, உங்கள் குடும்ப உறுப்பினருள் ஒருவரையோ, பாதுகாவலரையோ வேறு உதவியாளரையோ சேர்க்க நேரிடலாம். உங்கள் உதவியாளர் உங்களுக்கான முடிவுகளை எடுப்பதற்கு அல்ல, உங்களை வழிநடத்தவே உள்ளார் மேலும் அவர் இந்தச் செயல்பாடுகளில் எப்போது வேண்டுமானாலும் சேர்க்கப்படலாம். தனிப்பட்ட உதவியாளரைத் தேர்ந்தெடுக்க விரும்பினால், மேலும் விவரங்களுக்கு உங்கள் முதன்மைத் தொடர்பாளரைத் தொடர்புகொள்ளலாம்.

# உரிமைகளும் பொறுப்புகளும்

**உங்கள் உரிமைகளைத் தெரிந்து கொள்ளுங்கள்**

Anglicare Victoria –வுடன் நீங்கள் பணியாற்றும்போது உங்களுக்கான உரிமைகள்:

- எப்போதுமே பணிவுடனும் மரியாதையுடனும் நடத்தப்படுதல்
- மதிப்புகள் மற்றும் நம்பிக்கைகளுடைய தனிப்பட்ட நபராகக் கருதப்படுதல்
- உங்களை பாதிக்கும் முடிவுகளை உருவாக்குவதில் செய்வதில் பங்கெடுத்தல்
- உங்கள் விபரங்களைப் பார்வையிடுவோரையும், உங்கள் பதிவுகளின் நிலையையும் அறிந்துகொள்ளுதல்
- உங்களைப்பற்றி எழுதப்பட்ட தகவல்களைத் தெரிந்துகொள்ளக் கோருதல்
- உங்கள் கலாச்சாரம் ஒப்புக்கொள்ளப்பட்டு மதிக்கப்படுதல்
- தாக்குதல்களில் இருந்து பாதுகாப்பாக இருத்தல்

**உங்கள் பொறுப்புகளைத் தெரிந்து கொள்ளுங்கள்**

- Anglicare Victoria-வில் தொடர்பில் உள்ள மற்றவர்களின் இரகசியத்தை மதிக்கவேண்டும்
- உங்களால் சந்திப்புகளுக்கு வரமுடியவில்லை என்றால், முன்னரே எங்களுக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும்
- உங்கள் குடும்பத்தினரைத் தொடர்புகொண்டு, அவர்கள் Anglicare Victoria-உடன் உங்களுக்குத் துணை நிற்பதில் ஈடுபட செய்வதில் ஏதேனும் கருத்துக்கள் இருந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்
- எங்களோடு செய்யப்பட்ட ஒப்பந்தங்களை மதிக்க வேண்டும்
- Anglicare Victoria-வில் உங்களோடு பணிபுரியும் மற்றவரிடம் பணிவையும் மரியாதையையும் காட்டுதல் வேண்டும்
- உங்கள் தேர்வுகளுக்கும் நடத்தைக்கும் நீங்களே பொறுப்பாக வேண்டும்

# உங்கள் பாதுகாப்பு

### வன்கொடுமைகளிலிருந்து பாதுகாப்பு

மக்களை வன்கொடுமையிலிருந்து பாதுகாக்கத் துணை நிற்பது Anglicare Victoria-விற்கு மிகவும் முக்கியமாகும். உடல், சொல் மற்றும் பாலியல் ரீதியான வன்கொடுமைகளின்றி வாழ உங்களுக்கு உரிமை உண்டு. எவ்வகை வன்கொடுமை யார்மீது நடந்தாலும், ஏற்றுக்கொள்ள முடியாது.

உடல் ரீதியான வன்கொடுமையாவது, அடிப்பது, உதைப்பது, சுரண்டுவது அல்லது அந்த நபருக்கு வலியோ வேதனையோ ஏற்படுத்தும் வகையில் தீண்டுவது என அனைத்தையும் உள்ளடக்கியது.

சொல் ரீதியான வன்கொடுமை என்பது காயப்படுத்தக்கூடிய அவமானங்கள், பெயர்கள் வைத்தல், மிரட்டுதல், அல்லது கேலி செய்தலை உள்ளடக்கியதாகும்.

உங்கள் எழுத்து மூலமாகவோ, நீங்கள் குறுந்தகவல், மெசேஜ் அல்லது இணையதளம் மூலம் அனுப்பும் படங்கள் மூலமாகவோ பிறரை துன்புறுத்துவதோ மிரட்டுவதோ ஏற்றுக்கொள்ளப்படாது.

பெரியவர் ஒருவரோ வளர் இளம் பருவத்தினரோ, குழந்தையோ, தனது ஆற்றல் அல்லது அதிகாரம் கொண்டு ஒரு குழந்தையை பாலியல் செயல்பாட்டில் ஈடுபட வைத்தால் அது, குழந்தைப் பாலியல் வன்கொடுமை ஆகும். குழந்தைக்கு உடல் மற்றும் உணர்வு ரீதியான பாதிப்புகளை இந்த வன்கொடுமை ஏற்படுத்தும். இது மிகத் தீவிரமானதும் சட்டத்திற்குப் புறம்பானதும் ஆகும்.

### உங்களை யாரேனும் வன்கொடுமைப்படுத்தினால் அல்லது வன்கொடுமைப்படுத்த நேரலாம் என்று தோன்றினால் செய்ய வேண்டியவை

நீங்கள் உடல், சொல் அல்லது பாலியல் ரீதியாக வன்கொடுமைப்பட்டிருந்தாலோ அல்லது யாரேனும் உங்களை வந்கொட்டுமைப்படுத்தலாம் என்று எண்ணினாலோ, தயவுசெய்து யாரேனும் Anglicare Victoria பணியாளரிடமோ அல்லது நீங்கள் நம்பக்கூடிய வேறு பெரியவரிடமோ (ஆசிரியர் அல்லது ஆலோசனை வழங்குபவர் போன்றோர்) தெரிவிக்கவும்.

உங்களின் பாதுகாப்பு எங்களுக்கு முற்றிலும் அவசியமாகும். உங்களைப் பாதுகாக்கவும் உங்களை பாதுகாப்பாகவும் மகிழ்ச்சியாகவும் உணர வைப்பதற்கு எங்களால் இயன்றவற்றைச் செய்ய விரும்புகிறோம். யாரேனும் உங்களை வன்கொடுமை செய்தாலோ செய்யலாம் என்று நினைத்தாலோ நீங்கள் பாதுகாப்பாகவும் மகிழ்ச்சியாகவும் உணர முடியாது.

**எங்களிடம் நீங்கள் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டீர்கள் அல்லது உட்படுத்தப்படலாம் என்றும் கூறுவதால் என்ன நிகழக்கூடும்.**

- உங்களுக்குச் செவிசாய்ப்போம்
- உங்கள் மீது நம்பிக்கை கொண்டு, உங்கள் மீது கவனம் செலுத்துவோம்
- நீங்கள் பிரச்சனைக்கு உள்ளாகமாட்டீர்கள்
- உங்களைப் பாதுகாத்து உங்களுக்கு மேலும் வன்கொடுமைகள் நடக்காமல் தடுப்போம்.
- காவல் துறையையோ குழந்தைகள் பாதுகாப்பையோ நங்கள் தொடர்பு கொள்ளுவதும் இதில் உள்ளடங்கும்.
- உங்களை பாதிக்கும் முடிவுகளக் குறித்து கருத்து தெரிவிக்கலாம்.
- நீங்கள் பாதுகாப்பாக உணர உங்களுக்குத் துணை நிற்போம். எவ்வாறாக உங்களுக்கு உதவ முடியும் என்று எங்களிடம் கூறினால், உங்களுக்குச் செவிசாய்த்து எங்களால் இயன்றவரை உதவுவோம்.
- நீங்கள் எங்களிடம் கூறும் புகார்களையும் அதற்குப் பதிலாய் நாங்கள் செய்பவற்றையும் ஒரு பதிவாய் வைத்திருப்போம். இப்பதிவுகள் தனிப்பட்டவை மற்றும் சட்டத்திற்கு உட்பட்டு உங்கள் தனியுரிமையையும் காப்போம்



# உங்கள் இலக்குகளை அடைதல்

Anglicare Victoria-வில் உங்களுக்கு எது அவசியம் என்றும் உங்கள் பலம், குறிக்கோள் ஆகியன என்ன என்பதையும் கண்டறிய உங்களுக்கு உதவுகிறோம். நாம் ஒன்றிணைந்து 'திட்டம்' ஒன்றை உருவாக்கலாம்.

நீங்கள் எண்ணியவாறு உங்கள் எதிர்காலத்தை அடைவதற்கு உங்களைத் தயார்படுத்தக்கூடிய இலக்குகள் மற்றும் மாற்றங்கள் மூலமாக உங்கள் எதிர்காலத்தை அமைத்துக் கொள்வதற்கு இது ஒரு வழிமுறையாகும்.

**இலக்குகள் என்றால் என்ன?**

ஒரு வரைபடம் அல்லது ஒரு வழிகாட்டும் புத்தகத்தைப் போல, நீங்கள் எங்கு செல்ல வேண்டும் என்று இலக்குகள் வழிகாட்டும். நீங்கள் Anglicare Victoria-வில் இலக்குகளைப் பட்டியலிடுவதால், உங்கள் எதிர்காலத் தேவைகளைக் கணிக்க எங்களுக்கு உதவும்.

இதனால்தான் இந்த "சேவைத் திட்டம்' மிகவும் பயனுள்ளது. எளிதில் புரிந்துகொள்ளும்படி தெளிவாக எழுதப்பட்டிருக்கும். உங்கள் பலங்களையும் ஆற்றல்களையும் தனிப்படுத்திக்காட்டி, உங்கள் இலக்குகளை அடைய வழிவகை செய்கிறோம்

சிறு அடிகளாக எடுத்து வைத்து, உங்களது திட்டங்களை மேம்படுத்தவும், உங்கள் வாழ்வில் நீங்கள் மாற்றம் செய்ய வேண்டும் என்று விரும்புகின்றவற்றை மாற்றவும் உதவுகிறோம்.

காலப் போக்கில், உங்களது வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்களையும், அடைந்த இலக்குகளையும் பார்ப்போம்.

# உங்கள் விவரங்கள்

Anglicare Victoria-வில் உங்களுடன் நாங்கள் ஆற்றும் பணி பற்றிய தகவல்களைச் சேகரிக்கிறோம். இதைத்தான் வாடிக்கையாளர் கோப்பு அல்லது பதிவு என்று அழைக்கிறோம்.

இந்த விபரங்கள் பாதுகாப்பாக சேமிக்கப்பட்டு உங்கள் இலக்குகள், திட்டங்கள், முன்னேற்றங்கள் ஆகியவற்றிற்குக் குறிப்பாக விளங்கும்.

உங்களுடன் பணியாற்றும் இந்த காலகட்டத்தில், உங்களின் மற்றும் உங்கள் குடும்பத்தின் விவரங்களை வேறு சேவைகளுக்காக (பள்ளிகள் அல்லது வேறு சேவை வழங்குநர்கள் போன்றவைக்காக) உங்களிடம் ஒப்புதல் கேட்க நேரிடலாம். உங்களிடம் கேட்கப்படும் இந்த அனுமதியானது, ஒப்புதல் விண்ணப்பத்தில் பதிவு செய்யப்படும்.

உங்களையும் உங்கள் தேவைகளையும் புரிந்து கொள்ள இது எங்களுக்கு உதவும். உங்கள் விபரங்கள் பகிரப்படும் ஏஜென்சி மற்றும் பிற மூன்றாம் நபர் மற்றும் பகிரப்படும் விபரத்தின் அளவு போன்றவை இவ்விண்ணப்பத்தில் இடம் பெறும். விபரங்களைப் பகிர்தல, திட்டமிடுதல் மற்றும் சிறப்பான சேவையை கொண்டு சேர்த்தல் போன்றவைக்கு இது உதவியாக இருக்கும்.

எடுத்துக்காட்டாக, உங்களது வழக்கு மேலாளரிடமோ கொடுக்கப்பட்டுள்ள சேவை வழங்குநரிடமோ மருத்துவர் அல்லது குடும்பத்தார் அல்லது பாதுகாவலர் போன்ற வேறு நபரிடமோ உங்கள் குறிக்கோள்களை மேம்படுத்த உதவ முடியும்.

# உங்கள் விவரங்கள் முக்கியமானவை மற்றும் பாதுகாக்கப்பட்டவை



# தனியுரிமை மற்றும் இரகசியக்காப்பு

**Anglicare Victoria-வில் உங்கள் தனியுரிமை எங்களுக்கு முக்கியம் மற்றும் உங்களது விவரங்களை மரியாதையுடனும் நேர்மையுடனும் நாங்கள் பாதுகாக்கின்றோம்.**

அனைத்து Anglicare Victoria பணியாளர்களும் தன்னார்வலர்களும் சம்மந்தப்பட்ட தனியுரிமை சட்டங்கள் பற்றியும் எங்கள் சேவைகள் மற்றும் நிர்வாக அமைப்புகள் இச்சட்டங்களுக்கு உட்பட்டு உங்களுக்கு சேவைகளை அளிக்கின்றது எனவும் அறிந்திருக்க வேண்டும்.

**எங்கள் தனியுரிமை கொள்கை மற்றும் இரகசியக்காப்பில் எங்கள் அணுகுமுறை**

Anglicare Victoria இவற்றை செய்யும்:

- உங்களுக்கு நாங்கள் வழங்க வேண்டிய சேவையுடனான தகவலை மட்டும் சேகரிப்போம். (உங்களைப் பற்றிய விவரங்களை எங்களுக்குத் தர வேண்டியதில்லை. ஆனால், அவ்வாறு நீங்கள் விவரங்கள் தராமல் போனால், உங்களுக்கு தேவைப்படுகின்ற அல்லது நீங்கள் கேட்கின்ற சேவைகளை வழங்க முடியாமல் போகலாம்)
- எங்கள் சேவைகளை உபயோகிக்கும் எந்த நபரும் நாங்கள் ஏன் உங்கள் சொந்த மற்றும் பாதுகாக்கப்பட வேண்டிய விவரங்களைப் பெறுகின்றோம் என்றும் அதை எவ்வாறு உபயோகிக்கிறோம் என்றும் அறிந்திருக்கிறதை உறுதி செய்யுங்கள்.
- தகவல்களைப் பாதுகாப்பாக வைத்து, அத்துமீறல்களில் இருந்து காத்துக்கொள்ளுங்கள்.
- தகவல்களை அவை பெறப்பட்டதன் முதன்மை நோக்கங்களுக்காக மட்டும் உபயோகிக்கவும் வெளியிடவும் செய்யலாம். உங்களுக்கு ஒரு சேவையைத் தேர்வு செய்வதே இதன் முதன்மை நோக்கமாகும். உங்கள் அனுமதியுடன் அல்லது சட்டத்தினால் அனுமதிக்கப்படும் சமயங்களில் உங்கள் தகவல்களை உபயோகப்படுத்தவோ வெளியிடவோ நேரலாம் (எகா. அவசர சேவைக்கு சிலரது பாதுகாப்பிற்காக தகவல்களை வெளியிட நேரலாம்)
- பப்ளிக் ரெக்கார்ட்ஸ் சட்டம் 1973 (Vic)-ன் கீழ் அனுமதிக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே தகவல்களை வைத்திருக்க முடியும்
- சட்டம் அனுமதிக்கவில்லை என்றாலோ அனுமதி மறுப்பது நிபுணத்துவக் கடமை மற்றும் சட்டப்பூர்வமானது என்றாலோ தவிர, எங்கள் பதிவுகளில் இருக்கும் உங்கள் தகவல்களைப் பெறுவதற்கு அனுமதிக்கிறோம். வாடிக்கையாளர்களுக்கு அவர்களைப் பற்றி நாங்கள் வைத்திருக்கும் தகவல்களைப் பெறுவதற்கு மற்றும் அவற்றில் பிழை இருந்தால், முடிக்கப்படாமல் இருந்தால், தவறாய் இருந்தால், புதுப்பிக்கப்படவில்லை என்றால் திருத்தம் செய்ய பொது அனுமதி உண்டு.

தனியுரிமை மற்றும் இரகசியக்காப்பு பற்றிய உங்களது உரிமைகளையும் பொறுப்புக்களையும் பற்றி மேலும் அறிந்து கொள்ள, உங்கள் உதவியாளரை அணுகலாம் அல்லது Anglicare Victoria-இன் தனியுரிமை கொள்கையின் நகலைக் கேட்கலாம்.

# தகவல் பரிமாற்றம்

Anglicare Victoria என்பது, குடும்ப வன்முறைப் பற்றிய தகவல் பரிமாற்றத் திட்டம் மற்றும் குழந்தைத் தகவல் பரிமாற்றத் திட்டத்தின் கீழ், பரிந்துரைக்கப்பட்ட தகவல் பரிமாற்ற நிறுவனம் ஆகும். இத்திட்டங்களின்படி வாடிக்கையாளர்களின் தகவல்களை, தேவைப்பட்டால் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்காக சட்டத்தின்படி பரிமாறலாம்.

சட்டத்திற்கு உட்பட்டும் நடைமுறைக்கு ஏற்றதாகவும் இருந்தால், உங்களது தகவல்களை வெளியிட நேரும் போது, உங்களுடன் விவாதித்து ஒப்புதல் பெறுவோம்.

சட்டத்திற்கு அல்லது நடைமுறைக்கு உட்படாத சமயங்களில் ஒப்புதல் விண்ணப்பம் மூலமாகவோ வேறு காரணங்களினாலோ ஒப்புதல் பெற இயலாது.

எடுத்துக்காட்டாக ஒரு நபரின் பாதுகாப்பு அல்லது நல்வாழ்வு சார்ந்த பிரச்சனைகளில், உங்கள் ஒப்புதல் பெற்று வெளியிட இயலாது. சட்டம் அனுமதித்தால் மட்டுமே எங்களால் உங்கள் தகவல்களைப் பகிர முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.



## பாதுகாப்புக் கடமை

உங்களுக்கோ வேறு நபருக்கோ எந்த தீங்கும் நேராமல் தடுக்க இயன்ற அளவிற்கு நடவடிக்கை எடுப்பது எங்கள் கடமையாகும்.

Anglicare Victoria-இன் பணியாளர், உங்களது அல்லது வேறு நபரின் பாதுகாப்பில் கவலை கொண்டால், அவர்கள் அதைத் தடுப்பதற்காகச் செயலாற்றி ஆபத்தின் விளைவுகளைக் குறைக்க வேண்டியது அவர்களின் பொறுப்பாகும்.

காவல்துறை, ஆம்புலன்ஸ் அல்லது குழந்தைப் பாதுகாப்புச் சேவைகள் ஆகியவற்றுள் சரியான ஆணையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

## தகவலை அறிக்கையிடுதல்

நாங்கள் ஒரு லாப நோக்கமற்ற அமைப்பு என்பதால் அரசுத் துறைகள் மற்றும் மானியங்கள், அறக்கட்டளைகள் மற்றும் ஃபவுன்டேஷன்கள் மூலமாக நிதி உதவி பெறுகிறோம். குறிப்பிட்ட கால இடைவெளிகளில் உங்கள் பெயரை உள்ளடக்கிய புள்ளியியல், விபரங்கள் மற்றும் அறிக்கைகள் ஆகியவற்றை வழங்க நேரிடலாம்.

தணிக்கைகள் மற்றும் Anglicare Victoria-இன் மேலாண்மை மூலம் உங்களுக்குச் சிறந்த சேவைகளை வழங்குவதற்காக வாடிக்கையாளர் கோப்புகளில் சேகரித்த தகவலையும் பயன்படுத்த நேரிடலாம்.



# பின்னூட்டம் மற்றும் குற்றச்சாட்டுகள்

### பின்னூட்டம்

வாடிக்கையாளரின் அனுபவம் எங்களுக்கு முக்கியம் என்பதால், உங்கள் பின்னூட்டத்தை வரவேற்கிறோம். எங்களது உதவி பற்றியும் நாங்கள் செய்யும் சேவையின் தரத்தைப் பற்றியும் எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். உங்கள் பின்னூட்டங்களை எங்கள் நல்ல நடைமுறைகளைக் கண்டறிவதற்கும் மேம்படுத்த வேண்டியவைகளை மேம்படுத்துவதற்கும் பயன்படுத்துவோம்.

### குற்றச்சாடுகள்

உங்கள் குற்றச்சாட்டுகள் மீது நாங்கள் கவனம் செலுத்துவதால், உங்களுக்கு அல்லது உங்கள் குடும்பத்துக்கு கவலை அளிக்கக் கூடிய எதையும் எங்களிடம் கூறுங்கள்.

- உங்கள் முதன்மைத் தொடர்பாளரிடம் ஆலோசியுங்கள். நீங்கள் சேவை பற்றி எவ்வாறு உணருகிறீர்கள் என்று அவர்கள் அறியாமல் இருக்கலாம்.
- Anglicare Victoria-இல் பணிபுரியும் யாரேனும் ஒருவரிடம் பேசுவது உங்களுக்கு சௌகரியமாக இருந்தால், அவர்களிடம் பேசுங்கள்.
- உங்கள் சார்பாக நீங்கள் நம்பும் வேறு நபர் எகா. குடும்பத்தினர், நண்பர் அல்லது வேறு உதவியாளர் மூலமாக எங்களை அணுகுங்கள்.

ஏதேனும் குற்றச்சாட்டு இருந்தால், பின்வருவனற்றைச் செய்ய உங்களுக்கு உரிமை உள்ளது:

- கவனிக்கப்பட்டு முறையாக நடத்தப்படுவீர்கள்.
- கவலைகளை முறையிட முறையான மற்றும் தேவையான உதவி செய்யப்படும்.
- சர்ச்சைகள், மோதல்கள் அல்லது குறைகள் தீர்த்து வைக்கப்படும்.
- உங்கள் தனியுரிமைக் காக்கப்படும்.
- நிலுவையிலுள்ள முடிவுகள் விரைவாக முடிவுக்கு வரும்.

மற்றும்,

- நிபுணத்துவத்தோடு நடந்துகொள்வது
- தனிப்பட்ட முறையில் இயன்றவரை முயன்று பிரச்சனைகளைத் தீர்ப்பது
- அதிகாரிகளுக்கு, சட்டம் மீறப்பட்டதா என்பதைத் தெரியப்படுத்துவதுஅனைத்துத் தரப்பினரையும்
- உதவியாளரை அணுக அனுமதிப்பது.

உங்கள் குற்றச்சாட்டுகளை நாங்கள் நிர்வகிக்கும் விதம்:

- நீங்கள் பேச வேண்டியவைகளைக் கவனித்து, விவாதித்து, கருத்தில் கொள்வோம்
- உங்கள் கவலைகளை அவ்வப்போது முற்றிலுமாகப் பரிசீலனை செய்வோம்
- குறுகிய காலத்தில் உங்கள் பிரச்சனைகளைத் தீர்ப்பதே எங்கள் நோக்கம்
- உங்கள் கருத்துக்களைப் பயன்படுத்தி எங்கள் சேவைகளை மேம்படுத்துவோம்
- உங்கள் குற்றச்சாட்டை யாரேனும் சம்மந்தப்பட்ட ஆணையர் அல்லது குறைகேள் அதிகாரி போன்ற அமைப்பு சாரா அதிகாரியுடன் பரிசீலனை செய்ய முடியும் என்ற உங்களது உரிமையை எடுத்துரைப்போம்.



# பின்னூட்டம் மற்றும் குற்றச்சாட்டுகள் தொடர்ச்சி

**குற்றச்சாட்டை எவ்வாறு பதிவு செய்வது?**

குற்றச்சாட்டுகள் மற்றும் பின்னூட்டங்களை ஆன்லைனில் (பெயர் குறிப்பிடாமல்) www.anglicarevic.org.au -இல் பதிவு செய்யலாம்.

கூடுதலாக, குற்றச்சாட்டையோ பாராட்டையோ- வாய்மொழியாக அல்லது எழுத்து மூலமாக Anglicare Victoria-இன் பணியாளர்கள் அல்லது அலுவலகத்தில் பதிவு செய்யலாம்.

**Anglicare Victoria-ஐப் பற்றி நீங்கள் எந்நேரமும் கீழ்க்கண்ட அதிகாரிகளிடம் குற்றம் சாட்டலாம்.**

**சுகாதார மற்றும் மனிதச் சேவைகள் ஆணையம்**
www.dhhs.vic.gov.au

**ஊனமுற்றோர் சேவைகளுக்கான ஆணையர்**
1800 677 342 • www.odcs.vic.gov.au

**Victorian தகவல் ஆணையரின் அலுவலகம்**
www.ovic.vic.gov.au

**குழந்தைகள் மற்றும் இளையோருக்கான ஆணையம்**
1300 782 978 • www.ccyp.vic.gov.au

**பொது வழக்கறிஞரின் அலுவலகம்**
1300 309 337 • www.publicadvocate.vic.gov.au

**தேசிய மனநல ஆணையம்**
www.mentalhealthcommission.gov.au

## முடிவுரை

எங்கள் சேவைகளை பல்வேறு காரணங்களுக்காக நிறுத்தலாம்:

- உங்கள் குறிக்கோள்களை அடைந்து, எங்கள் உதவி இனிமேல் தேவைப்படாத என்பதால்
- எங்கள் சேவையைப் பெறமுடியாத அளவிற்கு தொலைவில் குடி பெயர்கிறீர்கள் என்பதால்
- உங்கள் தேவைகளுக்கு ஏற்றது போல, மேம்பட்ட சேவையைத் தேர்ந்தெடுத்து விட்டீர்கள் என்பதால்

சட்ட ரீதியான காரணங்களுக்காக நங்கள் எங்கள் வாடிக்கையாளரின் கோப்புகளை ஒரு குறிப்பிட்ட காலம் வரை வைத்திருக்க நேரிடும். மேலும் உங்களுக்கு Anglicare Victoria-இன் சேவைகள் மீண்டும் தேவைப்பட்டால், மீண்டும் உங்களை வரவேற்கிறோம்.

**இச்சிற்றேட்டுடன் நாம் ஒன்றாக பணியாற்றுவது குறித்த பல தலைப்புகளின் முன்னோட்டத்தை வழங்குகிறது. எங்களின் சேவைகள் பற்றிய விரிவான தகவல்கள் நாங்கள் தயாரிக்கும் சிற்றேடுகளின் தொடர்கள், பிரசுரங்கள் மற்றும் விளம்பரப் பிரதிகளில் இடம்பெற்றிருக்கும்.**

**இவை அனைத்தும் எங்கள் அலுவலகங்களை அணுகுவதன் மூலம் கிடைக்கும்.**

## இந்தச் சிற்றேட்டை அறிந்துகொள்ளுதல்

இந்தச் சிற்றேட்டின் பயன்பாடு குறித்து எனக்கு விளக்கப்பட்டது மற்றும் இதில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை நான் புரிந்துகொண்டேன்:

- Anglicare Victoria-இன் சேவைகள்
- Anglicare Victoria பணியாளர்களின் பணி
- எனது உரிமைகள் மற்றும் கடமைகள்
- தனிப்பட்டவைகளாகக் கையாளப்பட வேண்டியவை
- என்னைப் பற்றிய தகவல்கள் எவ்வாறு ஆவணமாக்கப்படுகின்றன
- பின்னூட்டம் வழங்குவதற்கும் எங்களைத் தொடர்புகொள்வதற்குமான வழிமுறைகள்
- சேவைப் பதிவுகளுக்கான இனிவரும் அணுகல்

கிளையன்ட் பெயர்: ______________________

கையொப்பம்: ______________________

பணியாளர்: ______________________

கையொப்பம்: ______________________
(Anglicare Victoria-இன் சார்பாக)

தேதி: ______________________

# வேண்டுகோள்கள் அல்லது கேள்விகளுக்கு உங்கள் வட்டார அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்

**Anglicare Victoria**

**மைய அலுவலகம்/CEO**
103 ஹூடில் தெரு
கோலிங்வுட் VIC 3066
03 9412 6133
*மைய அலுவலகத்திலிருந்து எந்த சேவைகளும் செயல்படுத்தப்பட மாட்டாது

**அல்பரி**
442 ஸ்விப்ட் தெரு
அல்பரி NSW 2640
02 6058 6500

**பேர்ன்ஸ்டேல்**
347 பிரதான சாலை
பேர்ன்ஸ்டேல் VIC 3875
03 5152 1213

**பேஸ்வாட்டர்**
666 மவுண்டைடன் ஹைவே
பேஸ்வாட்டர் VIC 3153
03 9721 3688

**பெண்டிகோ**
175-187 ஹர்கிரவ்ஸ் தெரு
பெண்டிகோ VIC 3550
03 5440 1100

**பெண்டிகோ**
10 மண்டி தெரு
பெண்டிகோ VIC 3550
03 5434 3922

**பாக்ஸ் ஹில்**
7-11 ஷிப்லே தெரு
பாக்ஸ் ஹில் VIC 3128
03 9896 6322

**ப்ராட்மேடோவ்ஸ்**
32 ரயில்வே கிரெசன்ட்
ப்ராட்மேடோவ்ஸ் VIC 3047
03 9301 5200

**கிரேக்பர்ன்**
59 கிரேக்பர்ன் சாலை
கிரேக்பர்ன் VIC 3064
03 9483 2401

**டேன்டன்நாங்**
131-147 வாக்கர் தெரு
டேன்டன்நாங் VIC 3175
03 9293 8500

**டெனிலிகுயின்**
டெனிலிகுயின் ஆர்கேட்
344 – 356 க்ரெஸ்ஸி தெரு
டெனிலிகுயின் NSW 2710
03 5881 7086

Anglicare Victoria

BETTER TOMORROWS

குழந்தைகள், இளையோர், குடும்பங்கள் மற்றும் பெரியவர்களின் எதிர்காலங்களை மாற்றியமைப்பதே எங்கள் நோக்கம். எங்கள் பணி தடுப்பு, பாதுகாப்பு, பலப்படுத்துதல் எனும் மூன்று வழிகாட்டும் தூண்களால் அடிதளமிடப்பட்டது.

- anglicarevic.org.au
- info@anglicarevic.org.au
- 1800 809 722
- youtube.com/anglicarevic
- twitter.com/anglicarevic
- facebook.com/anglicarevic

**எச்சுகா**
51- 53 ஹெய்கார்த் தெரு
எச்சுகா VIC 3564
03 5482 0900

**பிராங்க்ஸ்டன்**
60-64 வெல்ஸ் தெரு
பிராங்க்ஸ்டன் VIC 3199
03 9781 6700

**கைன்டன்**
1 விக்டோரியா தெரு
கைன்டன் VIC 3444
03 5421 2000

**ப்லென்டி வாலி**
8 ஹர்டில் தெரு
லாலோர் VIC 3075
03 9465 0322

**லியோங்கதா**
5a சர்ச் தெரு
லியோங்கதா VIC 3953
03 5662 4561

**லில்லிடேல்**
47-51 கேசல்லா தெரு
லில்லிடேல் VIC 3140
03 9735 4188

**மேரிபரோ**
29 டுகாரா தெரு
மேரிபரோ VIC 3465
03 5461 0200

**மில்துரா**
138 பைன் நிழற்சாலை
மில்துரா VIC 3500
03 5025 9300

**மோர்வெல்**
188-190 கமர்ஷியல் சாலை
மோர்வெல் VIC 3840
03 5133 9555

**பேக்கென்ஹாம்**
66-68 பிரத்தான சாலை
பேக்கென்ஹாம் VIC 3810
03 5945 2000

**பிரஸ்டன்**
42
பிரஸ்டன் VIC 3072
03 8470 9999

**ரோஸ்பட்**
1703 பாயிண்ட் நெப்பியன் சாலை
ரோஸ்பட் VIC 3939
03 5986 9900

**சன்ஷைன்**
டெனன்ஸி 2,
159 ஹார்வேச்ட்டர் சாலை
சன்ஷைன் VIC 3020

**ஸ்வான் ஹில்**
62 மெக்காலம் தெரு
ஸ்வான் ஹில் VIC 3585
03 5036 3200

**வாங்கரட்டா**
39 அவன்ஸ் தெரு
வாங்கரட்டா VIC 3677
03 5723 7900

**வராகல்**
சுவிட் 2, பார்க்லி தெரு
வராகல் VIC 3820
03 5622 8600

**வெர்ரிபீ**
2 மார்கெட் தெரு
வெர்ரிபீ VIC 3030
03 9731 2500

**வொந்தாகி**
ஷாப் 7-8/1 பில்சன் தெரு
வொந்தாகி VIC 3995
03 5135 9555

**யாராவைல்**
41 சொமர்வைல் சாலை
யாராவைல்
03 9396 7400

# பயனுள்ள தொடர்புகள்

**சுகாதாரம் மற்றும் மனித சேவைகள் துறை**

விக்டோரியாவின் சுகாதாரத்தை ஊக்குவிக்கும் மற்றும் பாதுகாக்கும் சுகாதாரம் சார்ந்த சேவைகள் மற்றும் நடவடிக்கைகள் பற்றிய தகவல்களைத் தருவது. விக்டோரியாவில் வழங்கப்படும் மனநல மற்றும் முதியோர் கவனிப்புச் சேவைகள் ஆகியனவும் இதிலடங்கும்.

**1300 253 942 • www.dhhs.vic.gov.au**

**CREATE**

தேசிய நுகர்வோர் அமைப்பு வீட்டு கவனிப்பு (out-of-home care )அனுபவத்தைத் தந்து குழந்தைகள் மற்றும் இளையோரின் குரலைக் குறித்துக் காட்டுகிறது. (உறவினர்கள் மூலம் கவனித்தல், காப்பகத்தில் வைத்து கவனித்தல் மற்றும் வீட்டில் கவனித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது).

**1800 655 105 • www.CREATE.org.au**

**ஃபாஸ்டர் கேர் அசோசியேஷன் ஆஃப் விக்டோரியா (FCAV)**

விக்டோரியன் குழந்தை வளர்ப்புப் பராமரிப்பாளர்களின் முதன்மை அமைப்பு.

**03 9416 4292 • www.fcav.org.au**

**அவசர உதவி**

உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் போது அவசர உதவிக்கு

**000 (மூன்று சீரோ)**

**மருத்துவ உதவி (Medicines Line)**

மருந்துச் சீட்டு, முகப்பு வழி மற்றும் இலவச மருந்துகள் பற்றிய தகவல் தரும் சேவை

**1300 633 424**

**நர்ஸ் ஆன் கால் (Nurse On Call)**

விக்டோரியன் அரசு சுகாதார தொலைபேசி சேவை 24/7 நிபுணத்துவம் வாய்ந்த பதிவு செய்யப்பட்ட செவிலியரிடம் அறிவுரை பெறுவதற்கு

**1300 606 024**

**கிரீஃப் ஹெல்ப்லைன் (Grief Helpline)**

இழப்பையும் துயரத்தையும் அனுபவிக்கும் மக்களுக்காக ஆலோசனை வழங்கும் பிரத்யேகமான இலவச சேவை

**1300 845 745 • www.griefline.org.au**

**கிட்ஸ் ஹெல்ப்லைன் (Kids Helpline)**

5 முதல் 25 வரையான இள வயதினருக்கு இலவச தொலைபேசி மற்றும் இணையவழி சேவைகள்

**1800 55 1800 • www.kidshelp.com.au**

**லைஃப்லைன் இடர்கால உதவி சேவை (Lifeline Crisis Support Service)**

ஆலோசனை வழங்கும் சேவைகள்

**13 11 14 • www.lifeline.org.au**

**பாரன்ட்லைன் விக்டோரியா (Parentline Victoria )**

மாகாணம் முழுவதிலும் உள்ள 18 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளின் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களுக்கான தொலைபேசிவழி ஆலோசனை வழங்கும்

**13 22 89 • www.parentline.com.au**

**தற்கொலை தடுப்பு (Suicide line)**

இலவசமான அடையாளமில்லா நிபுணத்துவமிக்க உதவி, 24 மணி நேரத்திலும், வாரத்தின் ஏழு நாட்களிலும் விக்டோரியா முழுமைக்கும்

**1300 651 251**

### மென்ஸ் லைன் (Men's Line)

ஆஸ்திரேலிய ஆண்களுக்கான நிபுணத்துவமிக்க தொலைபேசி மற்றும் இணையவழி உதவி மற்றும் தகவல் சேவை

**1300 78 99 78 • www.mensline.org.au**

### 1800 RESPECT

தேசிய ஆற்றுப்படுத்துதல் உதவி மையம், பாலியல் துன்புறுத்தல்கள் மற்றும் வீடு மற்றும் குடும்பம் சார்ந்த வன்முறைகளை அனுபவிப்போருக்கு, 24/7 தகவல் மற்றும் உதவி அளிக்கின்றது

**1800 737 732 • www.1800respect.org.au**

### சேஃப் ஸ்டெப்ஸ் (Safe Steps)

பெண்கள் மற்றும் குழந்தைகளைக் குடும்பம் சார்ந்த வன்முறைகளில் இருந்து விலகி வாழ உதவுகிறது.

**1800 015 188 • www.safesteps.org.au**

### மொழிபெயர்ப்பாளர் சேவை TIS

முக்கிய சேவைகளைச் சமமாகப் பெற இலவச மொழிபெயர்ப்புச் சேவை

**131 450 or 1800 131 450**
**www.tisnational.gov.au**

### சுவிட்ச்போர்ட் (Switchboard)

Lesbian (லெஸ்பியன்), gay (கே), bisexual (பைசெக்ஷுவல்), transgender (ட்ரான்ஸ்ஜெண்டர்), queer (க்வீர்) மற்றும் intersex (இன்டர்செக்ஸ்) (LGBTQI) ஆகியவற்றைச் சேர்ந்த மக்கள் மற்றும் அவர்களின் நண்பர்கள், குடும்பத்தினர் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்காக மாகாணம்முழுக்கப் பரந்த நிறுவனமாக இணை நிலையினர் மற்றும் தன்னார்வலர்களைச் சார்ந்து இயக்கப்படும் உதவிச் சேவைகள்.

**1800 184 527 • www.safesteps.org.au**

**13 அல்லது 1300 எண்களை அழைப்பதன் விலை**
உங்கள் வீட்டுத் தொலைபேசியிலிருந்து ஆஸ்திரேலியா முழுவதும் உள்ள 13 இலக்க எண்களை உள்ளூர் அழைப்புகளின் விலையிலேயே அழையுங்கள். உள்ளூர் அழைப்புக் கட்டணங்கள், தொலைபேசி சேவை வழங்குநரைப் பொறுத்து மாறுபடலாம் மற்றும் அதிக கட்டணம் விதிக்கப்படலாம். (அழைப்புக் கட்டணங்கள் உங்களுக்கும் பிசினஸிற்கும் இடையில் பகிரப்படுவதால் குறைக்கப்படுகிறது).
**1800 எண்கள் (இலவச அழைப்புகள்)**
1800 எண்களுக்கு உங்கள் வீட்டுத் தொலைபேசியிலிருந்து இலவச அழைப்புகள். பொதுத் தொலைபேசியிலிருந்தும் மொபைலில் இருந்தும் வரும் அழைப்புகள் கணக்கிடப்பட்டு, அதிகமாக வசூலிக்கப்படலாம்.

2018 124

**anglicarevic.org.au**

Anglicare Victoria

குழந்தைகள், இளையோர், குடும்பங்கள் மற்றும் பெரியவர்களின் எதிர்காலங்களை மாற்றியமைப்பதே எங்கள் நோக்கம். எங்கள் பணி தடுப்பு, பாதுகாப்பு, பலப்படுத்துதல் எனும் மூன்று வழிகாட்டும் தூண்களால் அடிதளமிடப்பட்டது.

BETTER TOMORROWS